மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் பதில் சொன்னால், அது எந்தத் தேதியில் சொன்னாலும் ஒரே பதில் தான். ஏப்ரல் முதல் தேதிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, தனி மருத்துவ மனை இல்லை என்றாலும்கூட, இடைப்பாடி நகரிலே ஏற்கெனவே உள்ள பொது மருத்துவமனையிலே ஒரு தனிப் பல்பிரிவு ஏற் படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை யாக இருக்கிறது. முதலிலே பெரிய மருத்துவ மனைகளில் எல் லாம் இந்த டெண்டல் கிளினிக் பிரிவை ஆரம்பித்த பிறகு, இந்த மருத்துவமனையைப் பற்றி சிந்திக்கலாம் என்று நினைக்கி றேன். இப்போது டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ் பிடலில் எல்லாம் இந்தப் பிரிவு இருக்கிறது. அதே மாதிரியாக தாலுக்கா மருத்துவமனைகளில் இல்லை. இப்போது மொத்தம் 93 இடங்களில் செயலாற்றிக் கொண்டு வருகிறது. மீதம் இருக் கும் மருத்துவமனைகளிலும் இந்தப் பிரிவை ஏற்படுத்தி விட்டு பிறகு இதற்கு வரலாம். தற்போது இதைப்பற்றி சிந்திப்பதற்கு இல்லை.

கோவில்பட்டி நகரசபையில் கூடுதல் துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்கும் திட்டம்

*வினா எண் 711—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி நகரசபையில் மக்கள் தொகை உயர்ந்துள்ளதை முன்னிட்டு கூடு தல் துப்புறவுத் தொழிலாளர்களை நியமிக்க அரசுக்கு அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்விலுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1982 ஏப்ரல் 1]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில்பட்டி நகராட்சியிலே சமீப காலத்திலே மக்கள் ஜனத் தொகை இரண்டு மடங்காகி இருப்பதால், அதிகமான அளவில் குடியிருப்புகளும் பெருகி வருகின்றன. கடந்த பல ஆண்டு காலமாக இருந்து வந்த அதே துப்புரவுத் தொழிலாளர் கள்தான் தற்போதும் இருப்பதால், அந்தத் துப்புரவுப்பணிகளை அவர்களால் சரிவர செய்ய முடியவில்லை என்பதை அரசு கவனத்தில் கொண்டு, இந்தத் துப்புரவுத் தொழிலாளர்களின் நியமனப் பணிகளில் காலதாமதம் செய்யாமல், அந்த விண்ணப் பத்தின்மீது, ஆய்வு செய்வதில் நேரத்தை அதிகமாக நீட்டிக்கா மல், உடனடியாக அங்கே தேவையான துப்புரவுத் தொழிலாளர் களை ஏற்படுத்த வேண்டிய உத்தரவுகளை அரசு போட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரசபையில் ஒரு தீர் மானம் போடப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படை யிலே கூடுதலாக 10 ஸ்வீப்பர்ஸ், 5 ஸ்கேவஞ்சர்ஸ், 10 டிரெய்ன் க்ளீனர்ஸ் இப்படி பல பணியாளர்களைப் பொறுத்த வரையில் மொத்தம் 39 பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் மற்றும் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அன்ட் பிரிவின்டிவ் மெடிசின் ஆகிய இருவரும் சேர்ந்து அதைப் பற்றி பரிசீலனை செய்து 39 இடங்களுக்குப் பதிலாக 34 இடங்கள் கொடுக்கலாம் என்று சொல்லி ஸ்வீப்பர்ஸ் எண் ணிக்கையையும், டிரெய்ன் க்ளீனர்ஸ் எண்ணிக்கையையும் குறைக் காமல் மற்ற இடங்களைக் குறைத்து அதாவது 34 இடங்கள் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரை இப்போது அரசின் ஆய்வில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சீக்கிரமாக அந்த வேலை வாய்ப்புக்களைக் கொடுத்து அந்த இடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதிலே காலதாமதம் ஏன் ஆக வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, இப்போதுதான் அதாவது 24—8—1981 அன்றுதான் அனுப்பினார்கள். அதற்குப் பிறகு இரண்டு டிப்பார்ட்மென்ட் சேர்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே ஆய்வில் உள்ளது என்று சொல்லி இருக்கிறேன். இந்தப் பதிலே கொஞ்சம் மன நிறைவு தரக் கூடிய பதிலாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

[1982 ஏப்ரல் 1

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே பணி செய்த துப்புரவாளர்கள் நிதி நிலைமை இல்லாததன் காரணத்தால் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே 34 பேர்கள் கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கின்றபோது ஏற்கனவே பணி செய்து நீக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த இடத்திலே பணிபுரிந்த யாரையும் நீக்கியதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீக்கி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் அதுபற்றிப் பரிசீலனை செய்து அப்படி யாராவது நீக்கப்பட்டு இருக்கிறார்களா என்று பார்த்து அதுபற்றி எந்த ரூல்ஸ்படி எப்படிக் கொண்டு வரலாம் என்பதைப் பார்க்கிறேன்.

உடல் நலப் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் இடங்கள்

*வினா எண். 712—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உடல்நலப் பணியாளர்களுக்கு (Health workers) பயிற்சி கொடுக்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

(ஆ) அவைகளில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பேர்கள் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது பதவியில் உள்ள உடல் நலப் பணியாளர்களை பலநோக்குத் திட்ட பணியாளர்களாக அமர்த்துவதற்காக விசேஷ பயிற்சி 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகிறது.

(ஆ) 31—12—1980 முடிய மொத்தம் 3,633 உடல் நலப் பணியாளர்கள் (ஆண், பெண்) பயிற்சி பெற்று இருக்கிறார்கள். மேலும் 9 தலைமை மாவட்ட மருத்துவமனைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 780 பேர்கள் (பெண்கள்) பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடல் பயிற்சி கொடுப்பது 40 இடங்களில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்